
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2048 ●செப்டம்பர் 2, 2017 Weekly E-paper ●September 2, 2017


# அரியணையிலும் அதே கொல்லன்!







● சுப.வீரபாண்டியன்

சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையை நாம் அனைவரும் அறிவோம். அரியணையில் பாண்டிய மன்னன் வீற்றிருக்க, தன் சிலம்பை உடைப்பாள் கண்ணகி. மாணிக்கப் பரல்கள் சிதறி ஓடும். தன் மனைவியின் சிலம்பில் இருந்தவை முத்துப் பரல்கள் என்பதால், தான் தவறு செய்துவிட்டோம், நீதி தவறிவிட்டோம் என்பதை உணர்ந்த மன்னன், **"யானோ அரசன், யானே கள்வன்"** என்று கூறி அங்கேயே உயிர் துறப்பான்.

அரியணையில் வீற்றிருந்தது நீதி தவறாத அரசன் என்பதால் அந்தக் காட்சி அங்கு அரங்கேறியது. ஒருவேளை, குற்றம் இழைத்த பொற்கொல்லனே மன்னனாக வீற்றிருந்தால் யாரிடம் நீதி கேட்க முடியும்?

***சிலம்பை உடைத்து என்ன பயன்***

***அரியணையிலும்***

***அதே கொல்லன்***

என்று ஒருகவிதையில் எழுதியிருப்பார், கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

இன்றைய அரசியல் சூழல், அந்த வரிகளைத்தான் நினைவுபடுத்துகிறது. எடப்பாடி அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டது என்பது எல்லோருக்கும் தெரிகிறது. யாரும் கோராமலே ஆளுநர் நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஆனால் எதிர்க்கட்சிகள் பலவும் அந்தக் கோரிக்கையை முன்வைத்த பின்னும், எதுவுமே நடக்காதது போலப் பேசுகின்றார் ஆளுநர்.

இப்போது குடியரசுத் தலைவரிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் என்ன பயன் என்ற எண்ணமே மக்களிடம் மேலோங்கியுள்ளது. குடியரசுத் தலைவர், ஆளுநர் அனைவரும், மோடியின் மறுமுகங்கள்தாம் என்றால் யாரிடம் நீதி கோருவது?

அரசியல் கட்சிகளைத் தாண்டி, பொதுமக்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் என்று பல்வேறு தரப்பினரும் இந்த அரசு நீடிப்பது சரியில்லையென்று வெளிப்படையாகவே கூறுகின்றனர்.

இந்து நாளேடு, "சட்ட ரீதியிலான வியாக்கியானங்களைத் தாண்டி, முதலில் தார்மீக ரீதியாக இந்த அரசு பதவியில் நீடிக்கும் தகுதியை இழந்துவிட்டது என்பதற்கு முதல்வர் பழனிச்சாமி முகம் கொடுக்க வேண்டும்.........கண்ணியமாக ஆட்சியிலிருந்து விலகுங்கள், மக்களைச் சந்தியுங்கள்" என்று தலையங்கம் (2017 செப்.1) எழுதியுள்ளது.

சரி, அவையெல்லாம் கண்ணியவான்களின் காதுகளில்தானே ஏறும்! ●


## நூல்கள் விற்பனையில்!

- தோழர் சுபவீயின் புதிய, பழைய நூல்கள்
- பேரவைத் தோழர்கள் எழுதியுள்ள நூல்கள்
- முற்போக்குச் சிந்தனையாளர்களின் நூல்கள்

அனைத்தும் விற்பனைக்குக் கிடைக்கும்!

திங்கள் முதல் சனி வரையில்

**விற்பனை நேரம்**

காலை 10 மணி - மதியம் 1 மணி

நூல்கள் வாங்குவது செலவன்று, முதலீடு!!

அனைவரும் வருக!

**கருஞ்சட்டைத் தமிழர் அலுவலகம்**

122/130, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,

கோடம்பாக்கம், சென்னை-24.

☎ 044-42047162

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## ● மதுரையில் ஆர்ப்பாட்டம்




**ம**துரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடைபெற்று வந்த அகழாய்வு நிறுத்தப்பட்டதையும், ஆய்வாளர் வேறு மாநிலத்துக்கு மாற்றப்பட்டதையும் கண்டித்து, திராவிட இயக்க தமிழர் பேரவையின் சார்பில் 16.09.2017 காலை 11 மணிக்கு, பேரவையின் பொதுச்செயலாளர் தோழர் சுப. வீரபாண்டியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது அனைவரும் பங்கேற்க வேண்டுகிறோம்.

## ● ஒன்றே சொல் நன்றே சொல் பத்தாண்டுப் பயணம்!




**க**லைஞர் தொலைக்காட்சியில், திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8.30 மணிக்கு, தோழர் சுபவீயின் 'ஒன்றே சொல் நன்றே சொல்' நிகழ்ச்சி நடைபெற்று வருகின்றது. 2007 ஆம் ஆண்டு தொடங்கிய அந்நிகழ்ச்சி, வரும் 17 ஆம் தேதியன்று, 10 ஆண்டுகளை நிறைவு செய்து, 11ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது. அதனையொட்டி, 18.09.2017 திங்கள் காலை 8.00 மணி முதல் 8.40 மணி வரை, சிறப்புக் காட்சிகள் கலைஞர் தொலைக்காட்சியில் இடம்பெறுகின்றன. கண்டு மகிழ்ந்திட வேண்டுகின்றோம்!

## ● பொறுப்பாளர்கள் நியமனம்



**20**.08.2017 அன்று சென்னை, கொளத்தூரில் நடைபெற்ற திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுக்குழுவில், வேலூர் மாவட்டத் தலைவராக ஜெகநாதன், மாவட்டச் செயலாளராக வி.எஸ்.பி.விஜய், மாவட்டப் பொருளாளராக சீனிவாசன். தஞ்சை மாவட்டத் தலைவராக புலவர் செல்லக் கலைவாணன், மாவட்டச் செயலாளராக ச.அ.சாமி. மதுரை புறநகர்மாவட்டத் தலைவராக நாகராஜன், மாவட்டச் செயலாளராக அழ.பிரபு. காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளராக இளங்கோ. தர்மபுரி மாவட்டத் துணைச் செயலாளராக நந்தகுமார் ஆகியோர் புதிய பொறுப்பாளர்களாகப் பொதுச்செயலாளரால் நியமிக்கப்பட்டனர்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## “நிதி ஆயோக்” கலைக்கவேண்டும்



**க**ல்வியைக் காவிமயமாக்கிக் கொண்டிருக்கிறது பா.ஜ.க.வின் மோடி அரசு.

சி.பி.எஸ்.சி. பாடத்திட்டப் பள்ளிகளில் சமஸ்கிருத வைர விழாக்களைக் கொண்டாடியது.

விருப்பப் பாடமாக இருந்த ஜெர்மன் மொழியை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் சமஸ்கிருதத்தை நுழைத்தது.

வரலாறுகளை மாற்றிப் பாடதிட்டங்களைத் தயாரிக்கிறது, இந்துத்துவ வரலாறுகளைத் திணித்துப் பாடத்திட்டங்களைத் தயாரிக்கிறது.

நீட் தேர்வு என்ற பெயரால் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மாணவர்களின் மருத்துவப் படிப்பிற்குப் படுபாதாளக் குழி தோண்டியிருக்கிறது.

இப்படி ஒரு தனித்த இனநலம் சார்ந்து கல்விக் கொள்கையைக் கொண்டு செல்லும் பா.ஜ.க. அரசின் அடுத்த அடி நிதி ஆயோக் என்ற அமைப்பு.

அரசு பள்ளிகள் சரிவரச் செயல்படவில்லை, கல்வித் தரம் தாழ்ந்துவிட்டது, எனவே இப்படிப்பட்ட அரசுப் பள்ளிளைத் தனியாரிடம் ஒப்படைத்துவிடலாம் என்று பரிந்துரை செய்கிறது இந்த நிதி ஆயோக்.

ஏற்கேனவே கல்வி வணிகமயமாகிக் கொண்டிருக்கிறது தனியார் நிறுவனங்களால்.

அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கும் அரசாங்கத்திடம் அரசுப் பள்ளிகளையும் வணிகமயமாக்கும் பரிந்துரையைச் செய்கிறது இந்த நிதி ஆயோக்.

சரியாக இயங்காத அரசுப் பள்ளிகளைத் தனியாரிடம் ஒப்படைத்துவிடலாம் என்று சொல்லும் நிதி ஆயோக், அப்பள்ளிகளைச் சரியாக இயக்காத அதிகாரிகள், அமைச்சர்கள், அரசாங்கத்தை என்ன செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்க வேண்டும். ஏன் சொல்லவில்லை?

பள்ளிகளின் கல்வித்தரம் தாழ்ந்து, சரியாக இயங்கவில்லை என்று சொன்னால் அதனைச் சரிசெய்து, தவறுகளைக் களைந்து கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பது அறிவுடையோர் கருத்து.

நிதி ஆயோக் இதற்கு எதிராக இருக்கிறது என்பதனால் அதன் மீது ஐயம் ஏற்படுகிறது.

மத்தியில் மோடியின் ஆட்சி அமைந்த பிறகு, திட்டக்குழுவைக் கலைத்து விட்டு, நிதி ஆயோக் என்பதை உருவாக்கியது என்பதனால், இந்த ஐயம் மேலும் வலுக்கிறது.

விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யக் கூடாது என்றும் -

விவசாயம் மற்றும் உணவுத் துறைகளுக்கான மானியங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் -

பொது வினியோகத் திட்டங்களை நிறுத்தி மூடிவிட வேண்டும் என்றும் பரிந்துரை செய்த நிதி ஆயோக், இப்பொழுது கல்வித் திட்டத்திலும் தவறான கொள்கையைப் பரிந்துரை செய்திருப்பது ஒரு மக்கள் விரோத செயல், மாணவர் விரோத செயல்.

நிதி ஆயோக் - இந்த அமைப்பு மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் அமைப்பு என்பதனால் உடனடியாக அதைக் கலைக்க வேண்டும்.

# கறுப்புப்பணத்தைக் காணவில்லை!

● இனியன்

சென்ற ஆண்டு நவம்பர் 8 ஆம் தேதி இரவு, 500. 1000 ரூபாய்த் தாள்கள் செல்லாது என்னும் அதிரடி அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டது. கறுப்புப் பணத்தை ஒழிக்க அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கைக்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது.

மறுநாள் காலை தொடங்கி மக்கள் வரிசை வரிசையாய்த் தங்களிடம் உள்ள வெள்ளைப் பணத்தை மாற்றுவதற்கு வங்கிகளின் வாசலில் நின்றனர். "மக்களே கவலைப்படாதீர்கள், கடைசி முறையாய் நீங்கள் வரிசையில் நிற்கின்றீர்கள். இதோ கறுப்புப்பணம் முழுவதையும் ஒழிக்கப் போகிறோம். இனிமேல் நீங்கள் ரேஷன் கடை வாசலில் கூட வரிசையில் நிற்க வேண்டியிருக்காது" என்றார் பிரதமர். அது மட்டுமின்றி, வரும் மார்ச் மாதத்தில் புதிய இந்தியா பிறந்துவிடும் என்றார்.

மக்கள் நம்பினார்கள்! வெளிநாட்டுக் கருப்புப்பணத்தை ஒழித்து, அந்தப் பணத்தை எல்லாம் இங்கு கொண்டுவந்து, ஒவ்வொருவர் கணக்கிலும் 15 லட்சம் வங்கியில் போடுவதாக வேறு, பாஜக தன் தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது. இப்போது இங்குள்ள கருப்புப்பணத்தையும் ஒழித்துவிட்டால், இன்னும் பல லட்சம் கிடைக்கும் என்று ஏழை இந்தியர்கள் நம்பிக் காத்திருந்தனர்.



1000, 500 ரூ தாள்களைச் செல்லாது என்று அறிவித்ததன் மூலம் புழக்கத்திலிருந்த 15.44 லட்சம் கோடி ரூபாய் முடங்கியது. அதில் 3 அல்லது 4 லட்சம் கோடி ரூபாய் கள்ளப்பணமாக இருக்கும் என்று அரசு நினைப்பதாகச் செய்திகள் வந்தன. அடடா, அத்தனை லட்சம் கறுப்புப்பணம் பிடிபடுவது நாட்டிற்கு நல்லதுதானே என்று அப்பாவி மக்கள் ஆசையோடு காத்திருந்தனர்.

இப்போது ரிசர்வ் வாங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது. 15.44 லட்சம் கோடியில் 15.28 கோடி திரும்ப வந்துவிட்டதாம். அதாவது 99% பணம் வெள்ளைப்பணமாக வந்து சேர்ந்துவிட்டது. இன்னும் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கூட்டுறவு வங்கியில் செலுத்தப்பட்ட பணம் இதில் சேர்க்கப்படவில்லையாம். அதையும் சேர்த்தால், 99.5% சதவீதம் பணம் வந்திருக்கக்கூடும். அப்படியானால் கறுப்புப்பணம் எங்கே? யாருக்கும் தெரியவில்லை. ஒன்று மட்டும் தெரிகிறது. இப்படியெல்லாம் கருப்புப்பணத்தை ஒழிக்க முடியாது என்பது. இதனால் துயரப்பட்டவர்கள், ஏழை, எளிய மக்களும், நடுத்தட்டு மக்களும்தான்! கோடிக்கணக்கில் பணம் வைத்திருந்தவர்கள், வங்கிகளின் வாசல்களில் நிற்காமலே எல்லாவற்றையும் மாற்றிவிட்டார்கள்.

இதனால் ஏற்பட்டுள்ள சோகங்கள் இன்னும் உள்ளன. மீண்டும் தாள்களை அச்சடிப்பதற்கு இரண்டு மடங்கு செலவு ஆகியுள்ளதாக, டைம்ஸ் ஆப் இந்தியா ஏடு ஒரு தகவலை வெளியிட்டுள்ளது. பலர் வேலை வாய்ப்பை இழந்தனர். நில விற்பனை (ரியல் எஸ்டேட்) பெரும் சரிவுக்கு உள்ளானது. விலைவாசி ஏறி விட்டது. மக்கள் மேலும் மேலும் துன்பத்திற்கு ஆளானதுதான் மிச்சம்!

பிரதமர் சொன்னதில் ஒன்றே ஒன்று மட்டும் உண்மையாகிவிடும் போலிருக்கிறது..... இனிமேல் ரேஷன் கடை வாசலில் யாரும் நிற்க வேண்டி வராது. ரேஷன் கடையையே ஒழித்து விட்டால், அந்தக் கடை வாசலில் யார் போய் நிற்பார்கள்? ●

# எங்களைக் கண்ணீரில் மிதக்க விட்டான்

● எழில்.இளங்கோவன்

தமிழகத்தின் தென்கோடிக் கடற்கரைப் பட்டினம் இராமேசுவரம்.

இங்கு வாழும் மீனவர்கள், அவர்களின் வாழ்வாதாரமான மீன் பிடித் தொழிலுக்குச் சொல்லாமல் 'பிழைப்புத் தேடி' வெளியூர்களுக்குச் சென்று கொண்டிருப்பதாக நாளிதழ்கள் செய்தி தருகின்றன.

என்ன காரணம்? இம்மீனவர்களுக்கு இந்திய – இலங்கை அரசுகளால் ஏற்பட்ட நெருக்கடிகளும், உயிர் ஆபத்தும்தான் காரணம் என்கிறார்கள் மீனவ மக்கள்.

நட்பு நாடு என்று இந்தியாவால் நீட்டி முழக்கப்படும் இலங்கையின் அமைச்சர் சொல்கிறார், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டினால் சுட்டுக் கொல்வோம் என்று.

இலங்கை அமைச்சரின் இப்பேச்சுக்கு இந்தியா தரப்பிலிருந்து ஒரு மறுப்புகூட வெளிவரவில்லை.

மாறாக, இந்தியா சொல்கிறது தமிழக மீனவர்கள் எல்லை தாண்டக்கூடாது என்று. அங்கு என்ன 'மைல்' கல்லா நட்டு வைத்திருக்கிறார்கள்? கடலில், துல்லியமாகப் பார்த்து எல்லை தாண்டாமல் இருக்க.

சில வேளைகளில் எதிர்பாராமல் எல்லை தாண்டுவது உலக மீனவர்களிடம் இயல்புதான். ஒன்று அவர்களை விட்டுவிடுவார்கள், அல்லது அவர்களைப் பிடித்து மீண்டும் அவர்கள் நாட்டில் ஒப்படைத்து விடுவார்கள்.




சுட்டுக்கொல்வேன் எனும் இந்த இரத்த வெறியை, இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது.

இன்னும் சொல்லப்போனால் இந்திய மீனவர்களை, இந்திய எல்லைக்குள் நுழைந்து அவர்களை அடிப்பதும், மீன்களைப் பறிப்பதும், வலைகளை அறுப்பதும், சித்திரவதை செய்வதும், கைது செய்வதும், சுடுவதும், படகுகளைப் பறிமுதல் செய்வதும் இலங்கைக் கடற்படைதான்.

அதனால் பல்வேறு பொருளாதார இழப்புகள், வாழ்வாதார இழப்புகள், உயிர் இழப்புகளுக்கு ஆளாகி வருகிறார்கள் தமிழக மீனவர்கள்.

இலங்கை கடற்படைக்கு எதிராக போராட்டங்களை நடத்தினார்கள்.

இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போராடினார்கள்.

ஏதாவது ஒரு தீர்வு கிடைக்குமா என்ற நப்பாசையில் இலங்கை மீனவர்களிடம் பேச்சு வார்த்தையும் நடத்திப் பார்த்துவிட்டார்கள் தமிழக மீனவர்கள்.

அனைத்தும் கானல் நீர். இவர்களை மனிதர்களாகக் கூட மத்திய, மாநில அரசுகள் மதிக்கவில்லை, ஆதரவுக் கரம்நீட்டவில்லை, உரிய நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இலங்கைக்கு ஆதரவு நிலையில் இந்தியா. தமிழர்களுக்கு எதிர்நிலையில் பா.ஜ.கவின் மோடி அரசு. பாவம், என்ன செய்வார்கள் மீனவர்கள்.

அவர்கள் மனிதர்கள். வாழவேண்டும். பிழைக்க வேண்டும். பிழைக்க வெளியூர்களுக்குப் போகத் தொடங்கிவிட்டார்கள்.

கரையோரம் தள்ளாடி மிதந்து கொண்டிருக்கிறது அவர்களின் படகுகள், அவர்களின் வாழ்க்கையைப் போல.

**அல்லற்பட்(டு) ஆற்றா(து) அழுதகண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை**

என்று எச்சரிக்கிறார் திருவள்ளுவர். இது மோடிக்கு மட்டுமல்ல மக்களின் சிந்தனைக்கும் கூட. ●




# விரல் வழி அன்று குரல் வழியும் தமிழ் சிறகடிக்கும்

● சிவதி

பரபரப்பான அலுவலகத்தில் ஒரு காட்சி.

அலுவலக மேலாளர் அவசரக் கடிதம் ஒன்றினைத் தட்டச்சருக்குச் சொல்லிக் (Dictate) கொண்டு இருக்கிறார். அவரும் கரும சிரத்தையாக அதனைக் குறிப்பு எடுத்து வருகிறார். குறிப்பெடுத்த அந்தச் சீட்டினை வைத்துக் கடிதத்தினைக் கணினியில் தட்டச்சு செய்து அதனை மெய்ப்புப் பார்த்து அச்சு எடுக்கிறார். பின்னர் மேலாளரின் ஒப்புதல் பெற்று மின்னஞ்சல் அனுப்புகிறார். அதன் பிறகு மூன்று நன்கு படிநிலைகளைக் கடந்து அந்தப் பணி முடிகிறது.

அதற்கு பதில் இப்படி இருந்தால் எப்படி இருக்கும்.

இப்போது அந்த மேலாளர் கணினி முன் உட்கார்ந்து கொள்கிறார். அவர் என்ன செய்தியை அனுப்ப வேண்டுமோ அதைச் சொல்கிறார். யாருடைய உதவியுமின்றி கணினியே விரைவாகத் தட்டச்சு செய்கிறது. இவ்வசதி ஆங்கிலத்தில் இருக்கிறது. தமிழில் இருக்கிறதா? இது தமிழ் மொழிக்குச் சாத்தியம்தானா? இது போன்ற வசதி தமிழுக்கு வந்தால் பெருமகிழ்ச்சி. இப்போது மகிழ்ச்சி அடைக்கூடிய காலம் கனிந்திருக்கிறது.

ஆம். இவ்வசதி பெற நாம் கணினியை நோக்கிகூடச் செல்ல வேண்டாம். நாம் கைகளில் இருக்கும் திறன் பேசியில் இப்போது பேசினாலே போதும். தமிழில் அதுவாக வேகமாகச், சரியாகச் சொற்களை அறிந்து தட்டச்சு செய்கிறது. எவ்வளவு அதிகமான சொற்களாக இருப்பினும் அதனை எளிதாகச் சாத்தியப்படுத்தி இருக்கிறது வளரும் தொழில் நுட்பம். இந்த வசதியினை அறிமுகம் செய்த கூகுள் நிறுவனத்திற்கு நாம் நன்றியினைத் தெரிவித்தே ஆகவேண்டும்.

சரி இதனை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பார்ப்போம். உங்கள் திறன் பேசியில் முதலில் Google Play Store செல்லுங்கள். அதன் பிறகு Gboard எனத் தட்டச்சு செய்யுங்கள். இச்செயலி பெரும்பாலும் உங்கள் திறன் பேசியில் ஏற்கனவே நிரப்பி இருக்க கூடும். இல்லை என்றாலும் தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.

இதனை ஆக்டிவேட் செய்ய, நீங்கள் ஏற்கனவே பயன்படுத்திவரும் விசைப்பலகையினை மாற்ற வேண்டும். இந்த Gboard setting™ சில மாற்றங்களைச் செய்வதின் மூலம் நாம் குரல் வழி தட்டச்சு செய்யும் முறையில் மிக எளிதில் பெறலாம்.

உங்கள் திறன்பேசியின் அமைப்புக்குச் (Settings) செல்லுங்கள். அங்கே Language and Input என்பதை தேர்வு செய்யுங்கள். அதில் Voice to Text என்பதை தேர்வு செய்யுங்கள். பின்னர் மொழியினைத் தேர்வு செய்யுங்கள். அதில் Use sytem language என்பதை அணைத்துவிட்டு தமிழைத் தேர்வு செய்து பயன்படுத்துங்கள். தமிழ் உள்ளீட்டு வகையினில் நான்கு வழிகள் உள்ளன. தமிழ் (இந்தியா), சிங்கப்பூர், மலேசியா, இலங்கை என்பதாக உள்ளது. உங்கள் மொழி உச்சரிப்புக்கு தகுந்தவாறு தேர்வு செய்து கொள்ளலாம். இப்போது. தட்டச்சுத் திரைக்கு வாருங்கள்.

ஒலி வாங்கி போன்ற அமைப்பு இருக்கும். அதனை தொட்டுக்கொண்டே தமிழில் பேசுங்கள் அதுவாகவே தட்டச்சு செய்வதை நீங்கள் காணலாம். விரைவாகப் பேசினாலும் இது நமது குரலினைப் புரிந்துகொண்டு எளிதில் விரைவாகத் தமிழ்த் தட்டச்சினைச் சாத்தியமாக்குகிறது. இப்போது பல பேருக்குத் தமிழின் சிறப்பு ழகரம் உச்சரிக்க வரவில்லை. இதனையும் சொற்களுக்கு ஏற்றவாறு கூகுள் சரிசெய்து கொள்வது வியப்பாக இருக்கிறது. அதாவது ‘தமிள்’ என்று உச்சரித்தால் கூட ‘தமிழ்’ என்று தட்டச்சு செய்து தருவது வியப்புதானே.

இது கூகுளின் முதல் பதிப்பு என்பதால் நமது உச்சரிப்பினை நுனுக்கமாகப் புரிந்து கொண்டு தட்டச்சு செய்வதில் சில தடுமாற்றங்கள் எழக்கூடும். ஆனால் அடுத்தடுத்து வரும் பதிகைகளில் இது மேம்படுத்தப்படும். காற்புள்ளி, முற்றுப்புள்ளி, மேற்கோள் குறியீடு என்பதெல்லாம் குரல் வழி அல்லாது செய்து கொள்ளக் கூடிய நிலை உள்ளது. இதுவும் பிற்பகுதியில் கூகுள் சரிசெய்யும் என நம்புகிறோம். இன்றே பதிவிறக்கம் செய்து ஒலி வழித் தட்டச்சினை செய்யுங்கள். இனி விரல் வழி மட்டுமல்ல குரல் வழியாகவும் தமிழ் சிறகடிக்கும்

## கருஞ்சட்டைத் தமிழர் அலுவலக முதல் நாள் நூல் விற்பனை








Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.